# சுகாதாரம் மற்றும் ஊடக அமைச்சு
# இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனம்

## வெற்றிடங்களுக்கு சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரல்

1957 இல. 49 அரச கைத்தொழில் சட்டத்தின் விதிமுறைகளின் பிரகாரம் இல. 14853/3 அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தில் கீழ்க்காணும் பதவிகளுக்கு சேர்த்துக் கொள்வதற்கு தகைமை யுள்ள உள்ளக மற்றும் வெளி விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **வெற்றிட பதவிகள்**

| தொ. இல. | பதவிப் பெயர் | வெற்றிட எண்ணிக்கை | சம்பள குறியீடு | சம்பள அளவு |
|---|---|---|---|---|
| 01 | உதவிப் பொது முகாமையாளர் (நிதி) | 01 | HM 1-1 | ரூ. 80,295 - 15x2,270 = 114,345/- |
| 02 | முகாமையாளர் (தொழிற்சாலைகள்) | 01 | MM 1-1 | ரூ. 53,175 - 10x1,375-15x1,910 = 95,575/- |
| 03 | முகாமையாளர் (ஆகு செலவுகள்) | 01 | MM 1-1 | ரூ. 53,175 - 10x1,375-15x1,910 = 95,575/- |
| 04 | முகாமையாளர் (வழங்கல்கள்) | 01 | MM 1-1 | ரூ. 53,175 - 10x1,375-15x1,910 = 95,575/- |
| 05 | உதவி முகாமையாளர் (சந்தைப்படுத்தல் மேம்பாடுகள்) | 01 | JM 1-1 | ரூ. 42,600 - 10x755 - 18x1,135 = 70,580/- |
| 06 | கணக்கு அதிகாரி | 01 | JM 1-1 | ரூ. 42,600 - 10x755 - 18x1,135 = 70,580/- |
| 07 | வழங்கல் அதிகாரி | 01 | JM 1-1 | ரூ. 42,600 - 10x755 - 18x1,135 = 70,580/- |
| 08 | நிர்வாக அதிகாரி | 01 | JM 1-1 | ரூ. 42,600 - 10x755 - 18x1,135 = 70,580/- |
| 09 | செயற்றிட்ட அதிகாரி | 01 | JM 1-1 | ரூ. 42,600 - 10x755 - 18x1,135 = 70,580/- |
| 10 | கணனி மற்றும் தரவு அதிகாரி | 01 | JM 1-1 | ரூ. 42,600 - 10x755 - 18x1,135 = 70,580/- |

(இதற்கு மேலதிகமாக, அரசு அனுமதித்த கொடுப்பனவுகள் மற்றும் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்படும் கொடுப்பனவுகளும் உரித்தாகும்)

02. **சகல விண்ணப்பதாரர்களும்**

i. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

ii. பதவிக்காக ஒப்படைக்கப்படும் வேலைகளை முறையாக நிறைவேற்றுவது போலவே நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு தேவையான உடல், உள ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

iii. சிறந்த நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்.

03. **சேர்த்துக் கொள்ளும் முறை**

i. நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் நேர்முகத்தேர்வு சபையினால் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம் கூட்டுத்தாபனத்தில் சேர்த்துக் கொள்ளும் முறைமையின் பிரகாரம் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

ii. ஊழியர் சேமலாப நிதிக்கு நியமனம் பெறுவோர் 8% உம் சேவை தருநரால் 12% ஆகவும் பங்களிப்புத் தொகையை செலுத்த வேண்டும். அதற்கு மேலதிகமாக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிக்கு நியமனம் பெறுபவரின் சம்பளத்தில் 3% இற்கு சமமான தொகை செலுத்தப்படும்.

04. **விண்ணப்பிக்க வேண்டிய முறை:-**

i. மேற்படி பதவிக்காக சேர்த்துக் கொள்ளும் போது கவனத்தில் கொள்ளப்படும் தகைமைகள் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட சகல விபரங்களையும் ஆயுர்வேத ஔடத கூட்டுத்தாபனத்தின் www.sladc.lk என்ற இணையதளத்திற்கு பிரவேசித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

ii. பத்திரிகை அறிவித்தலின் பிரகாரம் உத்தியோகபூர்வ இணையதளத்தில் குறிப்பிடப்படும் மாதிரி விண்ணப்பத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மூலம் பதவிக்காக விண்ணப்பிக்க முடிவதுடன் விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் தகைமைகளை உறுதி செய்யும் சான்றிதழ்களின் புகைப்படப் பிரதியை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

iii. அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனம் மற்றும் நியதிகள் சபைகளில் சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் தமது நிறுவனங்களின் தலைமையூடாக அனுப்பப்படல் வேண்டும்.

iv. விண்ணப்பங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

v. மேற்படி பல பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் வேறு வேறாக விண்ணப்பித்தல் வேண்டும்.

vi. விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் 2025.03.24ஆம் திகதி முடிவடைவதுடன் முறையாக விண்ணப்பிக்கும் விண்ணப்பங்கள் அத்தினம் அல்லது அத்தினத்திற்கு முன்பு தலைவர், இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனம், இல. 94, பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மஹரகம என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

vii. மேலும் தாமதமாகக் கிடைக்கும் பூர்த்தியற்ற, அடிப்படைத் தகைமைகளை பூர்த்தி செய்திராத மற்றும் அடிப்படைத் தகைமைகள் பூர்த்தி செய்துள்ளதாக உறுதி செய்யும் பிரதிகள் மூலம் உறுதி செய்திராத, முறையாக சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள் மறு அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

viii. தபாலில் தொலைந்துபோதல் அல்லது தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் பற்றி கூட்டுத்தாபனத்தினால் பொறுப்புக் கூறப்படமாட்டாது.

**கவனிக்கவும்:**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி அல்லது மேற்படி ஆட்சேர்ப்புடன் சம்பந்தப்பட்ட வேறு விடயங்கள் பற்றி ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படின் உத்தியோக பூர்வ இணையதளத்தில் அதுபற்றி காணுவதற்கு உட்படுத்தப்படும்.

தலைவர்,
இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனம்,
நாவின்ன, மஹரகம.
2025.03.06